முருகப்பெருமான் துணை
துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு
**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**
பாகம் : 1371
சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,
ஓம் சரவண ஜோதியே நமோ நம
01.07.2023, சனிக்கிழமை

1. ஓங்கார சக்திமிகு அரங்கனே
ஓங்கார சக்திகொண்ட தேசிகனே
ஓங்காரன் யான் சூட்சுமமாய் உன்னுள் இருக்க
உயர்வான ஓங்கார ஞான உலகம் படைக்க ஓங்காரக்குடில் படைத்த அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஆனி மாதம் 16 ம் நாள், 01.07.2023, சனிக்கிழமை)
வரங்களாக நித்தம் அரங்கன் உமக்கு
வாரி வழங்கி சக்தி ஊட்டி வர
3. வருகவே அரங்கன் தவமும் தர்மமுமே
வையகத்தை காத்து வழிநடத்தும்
அரங்கன் தருகின்ற அன்னதான சேவையே
அகிலத்தார்க்கு பசிப்பிணி சர்வரோகம் நீக்கி பாதுகாப்புத் தந்தருளும்
4. அருளவே அரங்கன் வழி தேர்வு செய்யும்
அன்பர்களே  இந்த அகிலத்தை ஆளும்
ஆற்றல்மிக்க ஞானவான்களாக
மாற்றம் பெறக் கூடும்
5. கூடவே அரங்கனைத் தொடர்ந்து குறையில்லா
உலகோர் தர்மம் செய்து கொண்டு
நாடெங்கிலும் சன்மார்க்கம் ஏற்று வர
ஞானிகளை வணங்கி பூஜித்து வர
6. வருகவே உலகம் மேன்மை பெறும்
வையகத்தில் தர்மஞான ஆட்சியாக
பெருமை மிக்க ஞானவான்களாக
பேருலகமே ஞான ஆட்சி தனை அடையும்

7. அடையவே அரங்கன் திருவடி பற்றி அகிலத்தார்
ஓங்காரக்குடில் நோக்கி வந்து
வரமென அரங்கன் தருகின்ற அருளமுது உண்டு
வையகத்தில் அன்னதான சேவை ஆற்றவேண்டும்
8. வேண்டிவேண்டி அரங்கன் வழி வந்தால்
வினை நீங்கி உலகோர் தொண்டர்களாக சீடர்களாக
அரங்கன் தேர்வு செய்கின்ற ஞானிகளாக
ஆகவே மாற்றம் கண்டு கலியுகத்தார் அற்புதம் பெறுவர்
9. அன்னதனால் உலகோர் அரங்கன் திருவடி பற்றி
ஆற்றல்மிக்க ஞானிகளை தொடர்ந்து பூஜை செய்து வர
மாற்றம் கண்டு உலகத்தில் ஞான ஆட்சி நடக்கும்
மொழிந்திட்ட ஞானஆசி முற்றே

–சுபம்–

முருகா,

உன் தலைமையில் நடக்கும் ஞான ஆட்சியில் லோபித்தனம் உள்ள மக்கள் பங்கு பெறக்கூடாது. என்னால் தேர்வு செய்யப்படும் தொண்டர்கள் உன் ஆசிப்பெற்றவர்களாக இருக்க வேண்டும். என் அருகில் இருப்பவர்கள் தயை சிந்தை உள்ள மக்களாக இருக்க வேண்டும். நான் தானம் கொடுக்கும்போது என் அருகில் இருப்பவர்கள் ஏன்? எதற்கு என்று கேட்கக்கூடாது.